1989 மே 2]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, திறக்கப்படுகின்றபோது செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, அது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் மகப்பேறு இல்லங்கள் இருக்கின்றன. செவிலியர் இருப்பது இல்லை. இரவு நேரத்தில் அவசரமாக வருகின்றபோது பல இடங்களில் இருப்பது இல்லை. பொதுவாக கிராமப்புறங்களில் குழந்தை இறப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லப் படுவதால், இந்த முறையில் செவிலியர்கள் இருப்பதற்கும் ஒரு அவசரமான கேஸ் என்று சொன்னால் பெரிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஏதாவது ஒரு வாகன ஏற்பாடும் மையமான ஒரு இடத்தில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் இருப்பது இல்லை என்று சொல்கின்றபோது நியமிக்கப்பட்ட செவிலியர்கள் பணிக்கு வருவதில்லை என்ற புகார் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அவ்வாறு செவிலியர்கள் மருததுவ மனைகளில் இல்லை என்று சொல்லி தனிப்பட்ட இடங்களிலிருந்து புகார்கள் வரும் என்று சொன்னால் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

திரு. எம். சீரங்கன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மகப்பேறு இல்லங்கள் இருக்கும்படியான பல இடங்களில் அது முறையாக இயங்குவதற்கு பாதுகாப்பான வசதிகளும் தண்ணீர் போன்ற வசதிகள் கூட இல்லாமல் பாதுக்காப்பற்ற நிலையில் இருக்கிறது. அதை அரசு அறியுமா ? அதற்கு விரைவில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில இடங்களில் இதுபற்றிய பிரச்சினைகள் எழுப்பபட்டு அவைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

பத்மநாபபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

*184—(*வினா எண். 420)* **திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகராட்சிக்கென குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சி மற்றும் இருபது வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 231.10 இலட்சங்களுக்கான உத்தேச மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இக் குடிநீர்த் திட்ட செயலாக்கத்திற்கான நகர்மறன்ற ஒப்புதல் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் கிடைக்கப் பெற்ற பின், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக இத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு அனுப்பி வைக்கும் அரசின் ஒப்புதல் பெற்றபின், திட்ட செய லாக்கப் பணிகள் தொடங்கப்படும்.

கூட்டுக் குடிதண்ணீர் திட்டம்.

185—(*வினா எண். 994) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா !

பொன்மலை நகராட்சி, (அ) ஆலத்தூர், கோ. அபிஷேகபுரம், அரியமங்கலம் பேரூராட்சிகளின் பகுதிகளுக்கான கூட்டுக் குடி தண்ணீர் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) அதற்கான மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் நடை பெற்று வருகின்றன.

(ஆ) திட்டச் செலவு ரூ. 421.97 இலட்சம், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 15.53 இலட்சம்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தைப் பற்றி, இது மிக விரைவாக இருக்க வேண்டும் என்ற நிலைமையில் தான் இந்தத் திட்டம் ஒவ்வொரு முறையும் ஒத்தி வைக்கப்படுவதும், பிறகு கிணறு வெட்டி அது பெயிலியர் ஆகி மறுபடியும் வெட்டக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஜனங்கள் ஏற்கனவே பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படு வதால், மிகவும் விரைவாக அதைத் துவக்கி அமல் நடத்து வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண். மிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள் நான் திருச்சிக்கு சென்ற பொழுதுகூட அங்கிருந்த குடிநீர் வடி